தெள்ளார் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திரு.T.K.G.ஆனந்த்
ஊராட்சி மன்ற தலைவர்

கடித எண்.01/2024 நாள்:29–01–2024

பொருள்: மனைப்பிரிவு தெள்ளார் ஊராட்சி ஒன்றியம் தெள்ளார் ஊராட்சி தெள்ளார் கிராம சர்வே எண்.548/2C 0.88.0 ஏர்ஸ் ஏக்கர் 2.17 செண்டு அல்லது 8800 சமீ, பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் சார்பு

பார்வை:– 1) அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:04–05–2017

2) அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை UD4 (3) 23-09-2020

3) நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவண்ணாமலை மாவட்டம், அவர்களின் கடித எண்.ROC No.I66BF4BX/2023/TVM/2024/TCP DATE: 08-01-2024

4) தெள்ளார் ஊராட்சி மன்ற தீர்மாண எண்.91 நாள்:29–01–2024

5) தானப்பத்திரம் எண்.25/2024 நாள்:04–01–2024

6) E-Challan No.20240122012218 Date:22-Jan-2024
IOB- THELLAR ACCOUNT NO.2232 Date:24-Jan-2024

அரசுத்தலைப்பு DPC 0217-60-800-AS-22709

வ.எண்.	விஸ்தீரணம்	சந்தை மொத்த மதிப்பு ஏக்கரில்	3% நில பயன் மாற்ற கட்டணம்
1	ஏக்கர் 2.17 செண்டு அல்லது 8800 சமீ (1 சமீ ரூ.57 வீதம்)	ரூ.5,00,000/–	ரூ.15,000/–

நிபந்தனைகள்:–

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெறவேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.
3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊராக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்கவேண்டும்.

உத்தரவு

தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், தெள்ளார் ஊராட்சி தெள்ளார் கிராமம், சர்வே எண்.548/2C 0.88.0 ஏர்ஸ் ஏக்கர் 2.17 செண்டு, அல்லது 8800. சமீ பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக வரன்முறைப்படுத்திட பார்வை 1, 2–ல் காணும் அரசானையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் பார்வை 3–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை 4 (அ) 5–ல் காணும் ஊராட்சியின் தீர்மானம் மற்றும் தானபத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை 6–ல் காணும் விவரப்படி புஞ்செய் வகைப்பாட்டில் இருந்து மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்திற்கு விதி எண். 3–ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம்) மேலும் விதி எண். 9–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு தெள்ளார் ஒன்றியம் தெள்ளார் கிராம சர்வே எண்.548/2C 0.88.0 ஏர்ஸ் ஏக்கர் 2.17 செண்டு, அல்லது 8800 சமீ பரப்பளவில் அமைந்துள்ள 55 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

24/1/24

தலைவர்

தெள்ளார் ஊராட்சி

தலைவர்
தெள்ளார் ஊராட்சி
தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்

பெறுதல்,

திரு.M.ஹித்தேஷ்ராஜ் தபெ.முத்துசேதுராமன்
நெ.13, மேற்கு பாண்டி ரோடு, வளவனூர்,
விழுப்புரம் மாவட்டம்.

நகல்:– உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருவண்ணாமலை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:– உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) திருவண்ணாமலை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:– சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் தெள்ளார் அவர்களுக்கு தகவலுக்காக

நகல்:– வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம் வந்தவாசி அவர்களுக்கு தகவலுக்காக